# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,554—1965 නොවැම්බර් 12 වැනි සිකුරාදා—1965.11.12

14,554 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விளம்பரக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 576 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 575 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### கூட்டுறவு அபிவிருத்திக் கொமிஷனர் (தத்துவங்கள் வரையறைக், கட்டளைச் சட்டம்

கட்டளை

(127 ம் அத்தியாயமான) கூட்டுறவு அபிவிருத்திக் கொமிஷனர் (தத்துவங்கள் வரையறைக்) கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி வர்த்தக, வியாபார அமைச்சர் மாப்பிற்றியகே வேலின் பீற்றர் பீரிஸ் ஆகிய நான், 1965 மே 7 ம் தேதிய 14,390 ம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை, அதற்குள்ள அட்டவணையின் முதலாம் பத்தியின் இறுதியில் பின்வருவதனைச் சேர்த்தல் மூலம், இதனால் திருத்துகின்றேன்.

" குருகுலசூரிய இமானுவேல் யூலியன் எட்கர் பெர்னாந்து ஹென்றி வில்பிரட் பராஜசேகர சந்திரசேகர "

எம். வி. பீ. பீரிஸ்,
வர்த்தக, வியாபார அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு நவெம்பர் மீ 1 ந் உ.

11—331

---

### விமானப் போக்குவரத்துச் சட்டம்

(365 ம் அத்தியாயமான) விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் 24 ம் பிரிவினால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

ஈ. எல். பி. குருல்ல,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு நொவெம்பர் மீ 5 ந் உ.

ஒழுங்கு விதி

1955 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ம் தேதிய 10,812 இலக்க கசெற்றின் அனுபந்தத்தில் பிரசுரிக்கப்பட்டு, பின் அவ்வப்போது திருத்தப்பட்டவாறுள்ள 1955 ம் ஆண்டின் இலங்கை விமானப் போக்குவரத்து ஒழுங்கு விதிகள் இவ் ஒழுங்குவிதி கசெற்றில் பிரசுரிக்கப்படும் தேதியிலிருந்து, இதனால் மீண்டும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

(1) ஆங்குள்ள 158 ம் ஒழுங்கு விதியில் " பறத்தலாகாது " என்பதற்குப் பதிலாகப் பின்வருவன சேர்க்கப்படுதல் மூலமும் ; " பறத்தலாகாது. ஆகாயவிமானம் ஒன்று தொடர்பான இயக்க முறைக கைந்நூல், ஒரு துணை விமானமோட்டியையும அவ் விமானத்தில் ஏற்றிச் செல்லும்படி பணிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப்பணிப்பு துணைவிமான மோட்டி விஷயத்திலும் ஏற்புடையதாகும் " ;

(2) ஆங்குள்ள 294 ம் ஒழுங்குவிதியை நீக்கி விடுதல் மூலமும்.

11—320

---

### கொழும்பு கப்பற்றுறை நிர்வாகச் சட்டம்

14 (3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

1950 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கொழும்பு கப்பற்றுறை (நிர்வாக)ச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் 1964 ஒற்ரோபர் 2 ஆந் தேதிய 14,187 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்டதுமான ஒழுங்கு விதியானது 1965 சனவரி 2 ஆந் தேதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நிரந்தரச் செயலாளர்,
தேசியமயச்சேவை அமைச்சு

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஒக்டோபர் மீ, 28 ந் உ.

11—315/1

## கொழும்பு கப்பற்றுறை (நிர்வாகச்) சட்டம்

கொழும்பு கப்பற்றுறை (நிர்வாகச்) சட்டத்து (அத். 238) 12 ஆம் பிரிவின் கீழ் தேசீய மயச்சேவை அமைச்சரினால் ஆக்கப்பட்ட பிரமாணம்.

பதிப் தேசியமயச்சேவை அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 28 ந் உ.

பிரமாணம்

கொழும்பு கப்பற்றுறையில் செப்பனிடு துறை மேடையையும் வழிகாட்டு துறைமுக மேடையையும் உபயோகிக்கும் கலன்களுக்கு நன்னீர் வழங்குவதற்கு, ஒவ்வொரு 1,000 கலனுக்கு அல்லது அதிலொரு பகுதிக்கு ரூபா 10.50 சத வீதம் கணக்கிடப்பட்ட கட்டணம் கப்பற்றுறைக் கொமிசனரினுல் பெறப்படல் வேண்டும்.

11–315/2

## தல்வில–மாறவில மீன்பிடித் தகராறு

மேற்கூறிய மீன்பிடித் தகராற்றையிட்டு விசாரணை நடாத்திய திரு. ஜீ. ஈ. அம சிங்கா அவர்களின் அறிக்கை, கொழும்பு காலிமுகத்திலுள்ள கடற்றொழிற் பகுதி நூல் நிலைய மண்டபத்தில், 1965 ம் ஆண்டு டிசெம்பர் மாதம், 4 ம் திகதி காலை 10.00 மணிக்கு வாசிக்கப்படுமென்பதை, இத் தகராற்றோடு சம்பந்தப்பட்ட கட்சியினர்களுக்கும் இதில் அக்கறை கொண்டுள்ளோர்க்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சாம். எச். சில்வா,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு 3,
1965 ம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ந் உ.

11–373

## அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள்

பொலன்னறுவை ஆட்சி மாவட்டத்தில் உள்ள சிங்களப்பத்துப் பிரிவுக் காரியாதிகாரியின் காரியாலயம் மினனேரிய கிராமச்சபைக் காரியாலயக் கட்டிடத்தில் இருந்து, 1965 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியில் ஹிங்குறக்கொட (ஆர். பி. 3 வாய்க்கால் அருகில்) கிராமப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் முன்வசித்த வீட்டிற்கு மாற்றப்பட்டுள்ளதென்பதைப் பகிரங்கப்படுத்துகிறேன்.

பி. பீ. திசாநாயக்க,
பொலன்னறுவை மாகாண அதிபருக்காக.

பொலன்னறுவைக் கச்சேரி,
1965 ந் ஆண்டு நவம்பர் மீ 3 ந் உ.

4–427

## துப்பாக்கி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல்

வவுனியா மாவட்டம்

1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ம் திகதியிலிருந்து வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த துப்பாக்கி அனுமதிப்பத்திரங்கள் குறிக்கப்பட்ட பிரிவுக் காரியாதிகாரிகளால் புதுப்பிக்கப்படும். ஆகையால் துப்பாக்கி வைத்திருப்பவர்கள் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்குமுன் துப்பாக்கிகளையும், அனுமதிப்பத்திரங்களையும் சமர்ப்பித்து, அதற்குரிய பணத் தொகையையும் கொடுத்து 1966 ம் ஆண்டிற்குரிய அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளவும். இதற்குத் தவறியவர்கள் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் திகதி வரை அபராதம் கொடுத்து அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

2. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் திகதிக்கு முன் தங்கள் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கத் தவறியவர்கள்மீது வழக்குத் தொடரப்படும்.

டி. எம். பி. பீ. தசநாயக,
அரசாங்க அதிபர், வவுனியா மாவட்டம்.

வவுனியாக் கச்சேரி,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 1 ந் உ.

11–324

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரகாசாலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்டேர்ன் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.